1978 மார்ச் 4]

மாண்புமிகு திரு க. உரோர். எட்மண்ட் : தலைவரவர்களே, மூலக் கேள்வி சந்தானம் குழு அறிக்கை பற்றியது, மக்கள் குழு அமைப்பது பற்றியதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு வி. கே. கோதண்டராமன் : கூட்டுறவு நூற்பு ஆலை, கூட்டுறவுச் சர்க்கரை ஆலை போன்றவைகள் இருக்கின்றனவே, அவைகளுக்குத் தேர்தல் மூலமாகத்தான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று சந்தானம் கமிட்டியில் கூறப்பட்டிருக்கிறது. அப்படி இருந்தும் இதுவரையில் நாமினேஷன் முறையில் செய்யப் பட்டு வருகிறது. இந்த அரசு இதுபற்றி ஆய்வு செய்து அது தேர்தல் முறையிலே எடுக்கப்படுகின்ற நிலைமையினை அமுல் படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : தலைவரவர்களே, என்றாவது ஒருநாள் தேர்தல் நிச்சயமாக வந்துதான் ஆகவேண்டும்.

* வினா 385— திரு. ப. சந்திரன்: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கூட்டுறவு , சட்டம், அதன்கீழ் பிறப்பிக்கப்பட்ட விதிகளை திருத்தியமைப்பதற்கென Palani என்பவர் தலைமையில் அமைக்கப்பட்ட ஒரு நபர் குழுவின் பணி எந் நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு க. உரோ. எட்மண்ட்: தமிழ்நாடு கூட்டுறவுச் சட்டம் அதன் கீழ் பிறப்பிக்கப்பட்ட விதிகளை திருத்தியமைப் பதற்கான பரிந்துரைகள், கூட்டுறவு பதிவாளரிடமிருந்து வந்துள்ளன. அவை அரசின் தீவிர ஆலோசனையிலும், ஆய்விலும் உள்ளன.

திரு ப. சந்திரன் : தலைவரவர்களே, திரு. பழனி தலைமை யிலே ஒரு நபர் குழு அமைக்கப்பட்டதா? அதில் என்னென்ன பரிந்துரைகள் செய்யப்பட்டன என்று அறிய விரும்புகிறேன். அந்த விதிகள் அமுலுக்கு வந்துவிட்டனவா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு க. உரோ. எட்மண்ட் : தலைவரவர்களே, கூட்டுறவுச் சட்ட திருத்தங்களை ஆராய்வதற்கும், அவற்றில் தேவையான மாற்றங்களைச் செய்வதற்கும் ஒரு குழு அமைக்கப் பட்டிருக்கிறது. பழனி என்பவர் தலைமையிலே ஒரு நபர் குழு அமைக்கப்படவில்லை. பழனி என்பவர் அதிகாரியாகத்தான் அந்தக் குழுவிலே பணியாற்றி வருகிறார்.

திரு செ. சிவசாமி : கூட்டுறவுச் சங்கங்களுக்கு போர்ட் ஆப் டைரக்டர்களின் காலம் காலாவதியான பிற்பாடு புதிதாக இன்னும் டைரக்டர்கள் போடவில்லை. எப்போது போடப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: சட்டதிட்டங்கள் திருத்தக் குழு செயல் பட்டுக்கொண்டிருக்கிறது. சட்டதிட்டங்கள் திருத்தப்பட்ட பின்பு தேர்தல்கள் நிச்சயமாக நடக்கும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : கூட்டுறவுச் சங்கங்களிலே அரசாங்கம் பத்துப் பேர்களைக் கொண்ட குழுவைத் தேர்ந்தெடுத்து அனுப்பி வைக்குமாறு கூறுகிறார்கள். அது எப்போது அமல் படுத்தப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஆலோசனைக் குழு அமைக்க வேண்டும் என்று அதற்கான சட்ட திட்டங்கள் அமைக்கப்படும்போது தகுந்த நேரத்தில் அவைக்கு அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், அங்கத்தினர்கள் தெரிந்துகொள்ளக்கூடிய அளவுக்கு ஏதாவது அறிக்கைகள் மேஜை மீது வைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : அங்கத்தினர்கள் தெரிந்துகொள்ளக்கூடிய அளவிற்கு அதிலே கொடுக்கப்பட்டிருக்கக் கூடிய பரிந்துரைகள் எல்லாம் கூட்டுறவுத் துறையினுடைய சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு சட்ட திருத்தம் செய்வதற்குக் கொண்டுவரும்போது சபையிலே வைக்கப்பட்டுத்தான் ஆக வேண்டும்.

* வினா 386.— திரு. ரா. மார்க்கபந்து,

திரு. வி. கே. கோதண்டராமன்,

திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலைக்கப்பட்ட கூட்டுறவு சொஸைட்டி தலைவர்கள் அங்கத்தினர்கள்மீது சுமத்தப்பட்ட ஊழல்களை விசாரிக்க கமிட்டி அமைக்கப்பட்டு, அறிக்கை அரசாங்கத்திற்குத் தாக்கல் செய்யப் பட்டுள்ளதா?

(ஆ) அதன் தற்போதைய நிலை என்ன?

(இ) மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்க முயற்சி செய்யப்பட்டுள்ளனவா?